**SR . PRINCY SMMI**

# களங்கமில்லா அன்பின் கல்வாரிச் சுவடுகள்

## முன்னுரை:

அன்பின் உருவமாய் மக்கள் நடுவே நடமாடிய இயேசு, மனிதர்களாகிய நமக்கு தந்த ஒரே கட்டளை 'அன்பு '. இந்த அன்பு கட்டளையை வாழ்வின் இறுதி மூச்சு வரை கடைப்பிடிக்கவே அன்று கல்வாரி மலை நோக்கி தன் அன்பின் பயணத்தை தொடர்ந்தார் இயேசு. இந்த அன்பின் பயணத்தில்

**விலைமதிப்பில்லா இயேசுவின் அன்பு விலைக்கு விற்கப்படுகிறது**

**களங்கமில்லா இயேசுவின் அன்பு கயவஞ்சகர்களால் கலங்கடிக்கப்படுகிறது**

**ஈடு இணையில்லா இயேசுவின் அன்பு ஈட்டியால் துளைக்கப்படுகின்றது.**

**ஆழங்காண முடியா இயேசுவின் அன்பு ஆணிகளால் அளவிடப்படுகின்றது .**

இத்தகைய தியாகம் நிறைந்த இயேசுவின் அன்பின் பயணத்தில் உள்ள படிகட்டுகள் பதினான்கு. 1 கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் புனித பவுல் கூறுகின்ற அன்பின் பரிமாணங்கள் பதினான்கையும் இயேசுவின் வாழ்விலும், விவிலியம் கூறும் சான்றுகளின் அடிப்படையிலும் தியானித்து, நம் வாழ்வில் சிந்தித்து, வாருங்கள்! இந்த அன்பின் படிகட்டுகளில் ஏறி இயேசுவின் அன்பின் பயணத்தில் நாமும் உடன் பயணிப்போம்.

## முதல் நிலை: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருசிலுவையால் உலகத்தை மீட்டருளினீர் .**

### அன்பு பொறுமையுள்ளது

இயேசுவை “சிலுவையில் அறையும் , சிலுவையில் அறையும்” என்று, தாம் அன்பு செய்த மக்கள் கூட்டமே ஒருசேர கோஷமிட்ட போதும், மக்களே! என் அன்பு பொறுமையுள்ளது என்று வாய்திறந்து சொல்லி வெளிவேடம் காட்ட விரும்பாமல் அநியாயத் தீர்ப்பின் முன் அடக்கமாக தலைகுனிந்து பொறுமையுடன் நிற்கிறார் இயேசு.

**விவிலியத்தில்**

வலிமை உடையவரைவிடப் பொறுமை உடையவரே மேலானவர்; நகரை அடக்குகிறவரை விடத் தன்னை அடக்குகிறவரே சிறந்தவர். - என்கிறது நீதிமொழிகள் (16:32) . பழைய ஏற்பாட்டில் , யோசேப்பு தன் வாழ்வில் பொறுமையாய் மட்டுமல்ல, நீடிய பொறுமையாயிருந்த சந்தர்ப்பங்கள் தான் ஏராளம். சகோதரர்கள், கனவுக்காரன் என்று ஏளனம் செய்தபோதும், வேற்று நாட்டினவற்கு தன்னை விற்றுவிட்டபோதும், போத்திபாரின் மனைவியின் குற்றச்சாட்டினால் செய்யாத குற்றத்துக்காக சிறைவாசம் அனுபவித்தபோதும், எல்லாவற்றிலும் யோசேப்பு கடவுளின் நேரத்திற்காக பொறுமையோடு காத்திருந்தார். ஏற்றகாலத்தில் இறைவன் அவரை உயர்ந்த இடத்தில் உயர்த்தினார். அதுமட்டுமல்லாது, அவருக்கு அநியாயம் செய்த சகோதரர்கள் கூட அவர் காலடியில் மண்டியிட்டு நிற்குமளவுக்கு அவரை உயர்த்தினார். உயர்ந்த பதவியில் இருக்கும்போதும், யோசேப்பு தொடர்ந்து தனது நீடிய பொறுமையைக் கடைபிடித்தார் என்றே சொல்லவேண்டும். பதவியும் உயர்வும் வந்த வேளையில் கோபமடைந்து தன் சகோதரரைப் பழிவாங்கத் துணியவில்லை. அவர்களே தன்னைத் தேடி வந்தபோதும் பொறுமையாக நிதானமாக காரியங்களைக் கையாண்டதைக் காண்கிறோம். அதுதான் மிகவும் முக்கியமாக நாம் யோசேப்பின் வாழ்வில் கவனிக்க வேண்டும்.

**நம் வாழ்வில்**

யோசேப்புக்குள் காணப்பட்ட அந்த நீடிய பொறுமை,நமக்கு, இன்று நம் குடும்பங்களில் எப்பேற்பட்ட சவாலை முன் வைக்கிறது என்று சிந்திப்போம். பொறுமையிழந்து போகும் சந்தர்ப்பங்களை நாம் பல வேளைகளில் சந்தித்திருக்கிறோம். நாம் எதிர்பார்த்த காரியம் நடைபெறாமல் போகும் போது , நாம் எதிர்பார்த்தவர்கள் வராமல் ஏமாற்றமடையும் போது, ஜெபத்துக்குப் பதில் கிடைக்காமல் தாமதிக்கும் போது , இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் பொறுமையிழந்து வேதனைப்பட்டு இருந்திருக்கலாம். அன்பு பொறுமையுள்ளது என்று தியானிக்கும் நாம், இயேசுவைப் போல யோசேப்பைப் போல எல்லா சூழ்நிலைகளிலும் நிதானமாய் இருக்கக் கற்றுக்கொள்வோம். எப்போதும் பிறருடன் நீடிய பொறுமையாய் நடப்பதற்கு இறைவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபிப்போம்

**ஜெபம்:**

அநியாயத் தீர்ப்பிலும் பொறுமையை கடைபிடித்து அன்பு பொறுமையுள்ளது என்று எமக்கு கற்றுத் தந்த இயேசுவே, நாங்கள் பொறுமையிழந்த நேரங்களுக்காக வருந்துகின்றோம்.உமது நீடிய பொறுமையை எங்கள் வாழ்வில் கற்றுக்கொள்ள கிருபை தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்
மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 2- ஆம் நிலை : இயேசுவின் தோள் மீது சிலுவை

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர் .**

### அன்பு தீங்கு நினையாது

கெத்சமணி தோட்டத்தில் இயேசுவை கைது செய்த தலைமை குருவின் பணியாளன் மால்குவின் காதை, பேதுரு வாளால் வெட்டிய போது 'வாளை உறையில் போடு' என்று கூறி பகைவனுக்கும் தீங்கு நினையாமல், வெட்டிய காதை மீண்டும் ஒட்டினார் இயேசு. 'தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம்' என்று போதித்த இயேசு இங்கு தன் வார்த்தையை வாழ்வாக்க **'என் அன்பு தீங்கு நினையாது'** என்ற மௌன மொழியுடன் கல்வாரி நோக்கி தன் பயணத்தை தொடர்கிறார்

**விவிலியத்தில்:**

எரியும் முட்புதரில் மோசேவை அழைத்து, ஆரோனை துணையாக கொடுத்திருந்தாலும், திரளான மக்கள் கூட்டத்தின் பொறுப்பு முழுவதையும் , மோசே தானே சுமந்தார். இறைவனுக்கு கீழ்படிய துன்பங்களை அன்பால் தாங்கினார். மக்களின் ஏச்சிக்கும், இகழ்ச்சிக்கும் உள்ளான போது, கடவுளிடம் முறையிட்டார், இயேசு சிலுவையுடன் கல்வாரி நோக்கி பயணித்தது போன்று, மோசே இஸ்ராயேல் மக்களை சுமந்து கானான் நோக்கி பயணித்தார். "பூவுலகில் அனைத்து மாந்தரிலும் சாந்தமான மனிதராய் மோசே திகழ்ந்தார்" என்று கடவுளே சான்று பகர்ந்தார்.மோசேயின் சகோதரர் ஆரோனும், சகோதரி மிரியாமும் அவரை கடுமையாக விமர்சித்த போது,கடவுள் மிரியாமை தொழுநோயால் தண்டித்தார். தமக்கெதிராக கடுமையாக பேசியபோதும், தம் சகோதரிக்கு தீங்கு நினைக்காமல், தொழுநோய் நீங்க ஆண்டவரிடம் மன்றாடி **அவளுக்கு** குணம் பெற்றுத்தந்தார்.

**நம் வாழ்வில்**:

நாம் வாழும் குடும்பத்தில் ஒருவர் ஒருவருடன் முகம் கொடுத்து பேசி , உரையாடி சிரித்து வாழாமல், ஆளுக்கொரு அறை என்று தனித்து வாழும் உலகமாக மாறிவிட்டது. இறுக்கமான மனதுடன், கவலை சோர்ந்த முகத்துடன் எந்திரமயமான வாழ்க்கை மிகவும் சுமையாக மாறிவிட்டது. பழிக்கு பழி வாங்க காத்து கொண்டிருக்கிறோம். எண்ணங்கள் அழகானால், வாழ்க்கையும் அழகாகும்.'உலகின் மிகச் சிறந்த வைரம் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே ' . எதிர்மறை எண்ணங்களே நம்மை தனிமைப்படுத்தி விடுகின்றது. கவலை, பழிவாங்கும் எண்ணம், கோபம்,மனஸ்தாபம், வெறுப்பு போன்ற வாழ்க்கை சுமைகளை இந்த கல்வாரி பயணத்தில் வைத்துவிட்டு மோசேயிடமும் இயேசுவிட**மும்** உள்ள நேர்மறை எண்ணங்களை பெற்றுக்கொள்வோம்.

**ஜெபம்**:

நல்ல உள்ளம் படைத்த இயேசுவே! தூயதோர் உள்ளத்தை எம்முள்ளே உருவாக்கும், வாழ்வை சுமையாக்காமல், பிறரைப் பற்றியும், வாழ்வைப் பற்றியும் நேர்மறை எண்ணங்களால் ஒவ்வொரு நாளும் எம் வாழ்வை அழகுப்படுத்த வரம் தாரும்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 3ஆம் நிலை : இயேசு முதல் முறையாக தரையில் விழுகிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர் .**

### அன்பு பொறாமைப்படாது

பாவி என்றோ, பரிசுத்தன் என்றோ, ஏழை என்றோ, பணக்காரர் என்றோ பாகுபாடு பார்க்காமல் அனைவரிடமும் சரிசமமாக கரிசனை காட்டிய இயேசு, ஏழை கைம்பெண்ணின் எளிய காணிக்கையை பாராட்டினார். நூற்றுவதலைவனின் பெரிய நம்பிக்கையை பாராட்டினார். குறை காணும் நோக்குடன் தன்னை அணுகிய பரிசேயர், சதுசேயர், தலைமைக்குருக்கள் அனைவரின் பொறாமை நிறைந்த கண்களை சாதுரியமான பதில்களால் குருடாக்கினார். பொறாமை என்ற கீழ்த்தரமான குணத்திற்குள் வீழ்ந்து கிடந்த மானிடருக்கு நற் பாடம் கற்பிக்க உடல் பலவீனமும் சிலுவை பாரமும் அவரை வீழ்த்தினாலும் புதிய உத்வேகத்துடன் எழுந்து பயணிக்க ஆயத்தமாகிறார்

**விவிலியத்தில்:**

இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் பொல்லாத சிந்தனைகளில் முதலிடம் வகிப்பது பொறாமை. பொறாமையும் சீற்றமும் நம் வாழ்நாளைக் குறைக்கும்; பொறாமையும் கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ் செயல்களும் நடக்கும். என்கிறது விவிலியம்

ஒவ்வொரு தீய செயலுக்கும் பொறாமை தான் தூண்டுதல்.மண்ணின் முதல் கொலையாளி காயின். தன் சகோதரன் ஆபேல் மேல் கொண்ட பொறாமையினால் காயின் அவனை கொலை செய்தான்.

எனக்கு குழந்தை இல்லையே என்று அங்கலாய்த்த ராகேல் பிள்ளைபேறு பெற்ற தம் சகோதரியின் மேல் பொறாமை கொண்டார்.

தன்னைவிட தாவீதை மக்கள் புகழ்ந்தார்கள் என்பதற்காக, தாவீதின்மேல் பொறாமை கொண்ட சவுல், சாகும் வரை அந்த ஆவியில் இருந்து விடுபட முடியவில்லை. எல்லா வேலையையும் விட்டு விட்டு தாவீதை கொல்வதிலேயே தீவிரமாக அலைந்தான்.

தொடக்க நூலில் நாம் கண்ட யோசேப்பு வேற்று நாட்டினவற்கு விற்கப்பட்டதும் தன் சகோதரர்களின் பொறாமையினால் தான் **என்பதை இங்கு நினைவு கூர்வோம்**

**நம் வாழ்வில்**

பொறாமை என்ற பாவம் நம்மிலும், நம் குடும்பத்திலும் நாம் வேலை செய்யும் இடத்திலும், நாம் வாழும் சமுதாயத்திலும் எத்தகைய விளைவுகளுக்கு நம்மை இட்டு செல்கிறது ? நமக்கு அடுத்து இருப்பவர் நம்மைவிட அதிகமாக சம்பாதித்து விட்டாலோ, அல்லது நல்ல பெயர் வாங்கி விட்டாலோ , வெற்றி பெற்றுவிட்டாலோ ,ஒரு படி முன்னேறிவிட்டாலோ நம் உள்ளுணர்வுக**ளின் நிலை** என்ன? நம்மை முன்னேற விடாமல், நம் உடல் நலத்தை கெடுத்து, உறவுகளை பிரிக்கும் இந்த பொறாமை, நம்மையும் நம் வாழ்வையும் அழித்துவிடாமல் இருக்க, ஒருவரை ஒருவர்,பாராட்டும் பழக்கத்தை கற்றுக்கொள்வோம்.பொறாமை கண்ணோட்டத்துடன் வாழ்ந்த நேரங்களுக்காக மனம் வருந்துவோம், மனம் திருந்துவோம்

**ஜெபம்:** அன்பு இயேசுவே, அடுத்திருப்பவரின் முன்னேற்றத்தை கண்டு பொறாமை படாமல் , நல் மனதுடன் பாராட்டும் வரம் தாரும்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 4 ஆம் நிலை : இயேசு தன் தாயை சந்திக்கிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர் .**

### அன்பு அனைத்திலும் மன உறுதியாயிருக்கும்

'**இதோ ஆண்டவரின் அடிமை**' என்று **தன்னையே** தாழ்த்திய அன்னை மரியாள், இயேசு தன் கருவில் உருவான நாள் முதல், கல்லறை வரை அவருடன் பயணிக்கிறார். 'உன் உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும் என்ற இறைவாக்கை கேட்டும், மன உறுதியாய் இருந்தவர், தன் மகனின் சிலுவைப்பாடுகளை நேரில் கண்டும், 'அன்பு அனைத்திலும் மன உறுதியாயிருக்கும்'- என்ற வார்த்தைகளால் சொல்லாமல் மௌன மொழிகளால், இயேசுவை கல்வாரி மலைக்கு வழி அனுப்பும் நிகழ்வு தான் இந்த தாய்-மகன் சந்திப்பு.

**விவிலியத்தில்:**

எபிமானு என்ற செலூக்கிய அரசன் யூதர்களை சிறைப்பிடித்து பல்வேறு துன்பங்களை அவர்களுக்குக் கொடுக்கிறான். யூதர்கள் தங்களையே தூய இனம் என்று கருதியதும், தங்கள் கடவுள்தான் உயர்ந்தவர் என்று நினைத்ததும் அவனுக்குப் பிடிக்கவில்லை. யூதர்களின் அறுவறுப்பாக இருந்த பன்றிக்கறியை தின்னுமாறு அவன் ஒரு தாயையும் அவரது ஏழு மகன்களையும் கட்டாயப்படுத்துகின்றான்.ஒருவர் பின் ஒருவராக மறுக்க, ஏழு மகன்களையும் அந்தத் தாயின் கண் முன் பல்வேறு சித்திரவதைகள் செய்து கொல்கிறான் மன்னன். இறுதியில் தாயும் கொல்லப்படுகிறார்.. இந்நிகழ்வில் வரும் தாய் வீரம் மிக்கவள். எந்த நிலையிலும் தன் உறுதிப்பாட்டை இழக்காத திடம் கொண்டவள். தன் மகன்களை இழப்பது தனக்கு வருத்தம் தந்தாலும், மறுவாழ்வில் அவர்கள் மீண்டும் கடவுளுக்குரியவராவார்கள் என்ற மனவுறுதியிலும், எதிர்நோக்கிலும் , **திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடப்போருக்கு கடவுள் கைம்மாறு அளிப்பார்** என்று உற்சாகப்படுத்துகின்றார். இந்த வீரத்தாய் புதிய ஏற்பாட்டின் அன்னை மரியாளை முன்குறித்து நிற்கிறாள். மரியாளும் தன் மகனின் இறப்பின்போது உடனிருந்து அவரை உற்சாகப்படுத்தியவர்தானே.

**நம் வாழ்வில்**

" திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்போருக்குக் கடவுள் கைம்மாறு தருவார்" என்று நம்பிய அந்த ஏழு சகோதரர்களின் வழி வந்தவர்கள் நாம் . நாமே நமக்காக வரையறுத்துக் கொள்ள வேண்டிய சிலநெறிமுறைகள் நம் வாழ்க்கையை நாம் சீராக வாழ உதவும் என்ற கோணத்தில் பார்த்தால், ஒரு தாய் உண்ண மறுக்கும் தன் குழந்தைக்கு நிலாவைக் காட்டியும், அலைபேசியை காட்டியும், சோறூட்டுவது போல, நல்ல மதிப்பெண்கள் வாங்கினால் " நீ கேட்டதை வாங்கித் தருவேன் " என மகனுக்கு ஊக்கமூட்டும் ஒரு தந்தையைப்போல, கிறிஸ்தவமும் சில சட்டதிட்டங்களை கொடுத்து நம்மை விசுவாச வாழ்வில் மன உறுதிபடுத்துகின்றது. திருஅவை நமக்கு கொடுத்துள்ள கட்டளைகளை கடைபிடிப்பதிலும், நம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பதிலும் நம் ஈடுபாடு என்ன என்று சிந்திப்போம்.

**ஜெபம்:**

மகனின் இலட்சியத்தை நிறைவேற்ற உற்சாகம் ஊட்டிய எம் அன்னையே, கத்தோலிக்க விசுவாசத்திற்கு எதிரான பல போதனைகளால் நாங்கள் குழம்பிப்போகாமல் எங்கள் விசுவாசத்தை தினந்தோறும் புதுப்பிக்கும் வரம் தாரும்.ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 5- ஆம் நிலை: இயேசுவுக்கு சீமோன் உதவி செய்கிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

**அன்பு தன்னலம் நாடாது**

**“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்”** என்ற இயேசுவின் போதனையை சீரேனே ஊரைச் சார்ந்த சீமோன் என்ற ஒரு வழிப்போக்கன் நேரில் கேட்டிருக்க வாய்ப்பில்லை.**இயேசு** தன் அன்பால் வழிநடத்தி வந்த சீடர்களுள் ஒருவர் கூட,உடன் இல்லாத நிலையில் 'அன்பு தன்னலம் நாடாது' என்ற அன்பின் இலக்கணத்தை வாழ்வாக்க, இயேசுவின் சிலுவையை சுமப்பதற்கு முதலில் கட்டாயப்படுத்தப்பட்டாலும், தன்னலம் துறந்து தியாக உள்ளத்துடன், உதவி செய்வதால் வரும் இடையூறுகளையும் தயங்காமல் ஏற்றுக்கொள்ள முன் வருகிறார் சீமோன்.

**விவிலியத்தில்:**

‘அன்பு தன்னலம் நாடாது’ என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு தோபித்து. தன் வாழ்நாளெல்லாம் உண்மையையும், நீதியையும் பின்பற்றியவர் கடவுளின் கட்டளைகளை மிகவும் நுணுக்கமாக கடைப்பிடிப்பதிலும், தன் மகன் தோபியாவுக்கு தன் சமயத்தை பற்றி சரியாக கற்றுக்கொடுப்பதிலும் தந்தையர்களுக்கெல்லாம் சிறந்த முன் மாதிரி. பசியுற்றோருக்கு உணவு, ஆடையற்றோருக்கு ஆடை கொடுப்பது, இறந்த யாருடைய சடலமாவது வெளியே எறியப்பட்டிருக்கக் கண்டால் (அ) கேள்விப்பட்டால், உண்ணும் உணவையும் பொருட்படுத்தாமல் உடனே சென்று அடக்கம் செய்வதை தன் வழக்கமாகவும் அன்புச்செயலாகவும் கொண்டிருந்தார். இதற்காக மன்னரால் தண்டிக்கப்பட்டு தன் உடைமைகளை எல்லாம் இழந்தபோதிலும் தொடர்ந்து அன்பு செயல்களை செய்வதை நிறுத்தவில்லை. இதற்காக அண்டை வீட்டார் இவரை இழித்துரைத்தப்போதும் 'அன்பு தன்னலம் நாடாது' என்ற உண்மையை இடர்கள் மத்தியிலும் வாழ்ந்து காட்டினார்.

**நம் வாழ்வில்:**

நான், என் குடும்பம்,என் வீடு,என் வேலை என்று நான்கு சுவற்றுக்குள் கதவை மூடி வாழப் பழகிவிட்டோம். அருகிருப்போரைக் கூட கவனிக்காமல், அலைபேசியில் நம் ஒட்டுமொத்த நேரத்தையும் செலவழிக்கும் காலம் இக்காலம் அன்பு செயல்கள் செய்வதால் வரும் இடையூறுகளை கண்டு பயந்து நமக்கேன் வம்பு என்று வாய்ப்புக்களை தட்டி கழித்துவிட்ட நம் தன்னலத்தை நினைத்து மனம் வருந்துவோம்! மனம் மாறுவோம்.

**ஜெபம்:**

தியாக உள்ளம் படைத்த இயேசுவே யார் தெரிந்தவர், யார் தெரியாதவர் என்று பார்க்காமல், தேவைப்படும் இடமெல்லாம் ஒரு சீமோனாய், ஒரு தோபித்தாய் அன்பு செயல்கள் செய்ய வரம் தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

### 6 - ஆம் நிலை : வெரோணிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறாள்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

**அன்பு நன்மை செய்யும்**

சென்றவிடமெல்லாம் நன்மை மட்டுமே செய்தார் இயேசு. ஓய்வு நாளில் மனிதருக்கு நன்மை செய்வதே முறை என்று சட்டங்களை சமநிலைப்படுத்தினார். பகைவர்களுக்கும் நன்மை செய்யுங்கள் என்று அறிவுரை வழங்கினார். இத்தகைய நன்மையே உருவான இயேசுவுக்கு பகைவர்களின் எல்லைக்கோட்டையும் தகர்த்தெறிந்து, அவருக்கு நன்மை செய்ய ,செந்நீர் வடிந்த அவரின் முகத்தை துடைக்க முன்வந்த வெரோணிக்கா என்ற வீரமங்கை, 'அன்பு நன்மை செய்யும்' என்ற அன்பின் இலக்கணத்தை இங்கே நமக்கு கற்று**த்** தருகிறாள்.

**விவிலியத்தில்:**

ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் தாவீது கோலியாத்தை வென்று இஸ்ரயேலுக்கு மிகப்பெரிய வெற்றியை பெற்றுக்கொடுக்கிறார். சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என்று தாவீதை பெருமைப்படுத்தும் வகையில் மக்கள் பாடியது முதல், தாவீதை கொலை செய்ய சவுல் தீவிரமாய் இருந்தான். சவுல் தாவீதை பாலைவனத்திலும், மலைகளிலும் தேடிக் கொண்டிருக்கும் போது, தெரியாமல் ஒருநாள் சவுல் தாவீதிடம் தனியாக ஒரு குகையில் அகப்பட நேரிட்டது . அப்போது தாவீதுடன் இருந்தவர்கள் சவுலைக் கொல்ல முயன்ற போது தாவீது அவர்களைத் தடுத்தான். தன்னைக் கொல்லத் தேடும் சவுலைக் கொல்ல தாவீதுக்கு வாய்ப்புக் கிடைத்தும் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மீது கை வைக்க கூடாது என்று கூறி பெருந்தன்மையோடு சவுலை மன்னித்து, தீமைக்கு பதிலாக நன்மை செய்தார்.

**நம் வாழ்வில்:**

அனைவரும் நம்மிடம் அன்பாக பழக வேண்டும், நமக்குரிய மரியாதை தரவேண்டும், ஏதாவது உதவி தேவை என்றால் அது உடனே நிறைவேற்ற வேண்டும், தீமை செய்யக் கூடாது என்று தான், அன்றாட வாழ்க்கையில் நாம் எதிர்பார்கிறோம். அவ்வாறு நாம் விரும்பியது நடக்க என்ன செய்ய வேண்டும், என்பதை தான், **பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும், அவர்களுக்குச் செய்யுங்கள்** என்கிறார் இயேசு. மற்றவர்களை மன்னிக்கும் மனப்பக்குவம், தெய்வபயம், தீமைக்கு பதிலாக நன்மை செய்வது,போன்ற குணங்களே தாவீதை அரசன் என்ற உயரத்துக்கு அழைத்துச் சென்றது. ஆனால் அரசராக ஆவதற்கு முன்பாக அவனோடு இருந்தவர்கள் யாரென்றால், கடன் பட்டவர்கள், முறு**முறுத்த**வர்கள், குறை சொல்கிறவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் தான் . ஆம், இன்றைக்கும் நம்முடைய வாழ்விலும் நம்மோடு இருப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், நம்மை அவர்கள் அவமானப்படுத்தினாலும், நம்மீது குறை கூறினாலும், தப்பான பொய் குற்றச்சாட்டுகள் கூறினாலும், அவர்களுக்கு நன்மை செய்யும் மனப்பக்குவம் நம்மிடம் இருக்கிறதா? **நன்மை செய்ய தெரிந்துருந்தும் நன்மை செய்யாவிட்டால் நாம் பாவிகள் என்றும்,நன்மை செய்பவர்கள் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்** என்றும் விவிலியம் கூறுகின்றது.நாம் எந்நிலையை சார்ந்தவர்கள்? -என்று சிந்திப்போம். மனம் வருந்துவோம், மனம் மாறுவோம்.

**ஜெபம்:**

அன்பு இயேசுவே! வாய்ப்புக்கிடைக்கும் போது நன்மை செய்த வெரோணிக்கா போன்று, தீமைக்குப் பதில் நன்மை செய்த தாவீதைப் போன்று எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் நன்மை செய்யக்கூடிய அன்**பு என்ற** கிருபை**யைத் எங்களுக்குத்** தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 7- ஆம் நிலை : இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்.

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

### அன்பு தற்புகழ்ச்சி கொள்ளாது

'நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும்' என்ற அலகையின் சோதனைக்கு அடிபணியாத இயேசு, நீ யூதரின் அரசனா? என்ற பிலாத்துவின் ஏளன கேள்விக்கும், வரவிருப்பவர் நீர் தாமா? (அ) வேறு ஒருவரை எதிர்ப்பார்க்க வேண்டுமா? என்ற சீடர்களின் கேள்விக்கும், இவர் தச்சர் மகன் அல்லவா? என்று சாதாரணமாக இயேசுவை எடை போட்ட மக்களுக்கும், **'நான் தான் மெசியா'** - என்று வெளிப்படையாக கூறி தற்புகழ்ச்சிக்கு இடங்கொடாமல், தற்புகழ்ச்சியினால் வீழ்ந்து கிடக்கும் மானுடம், தன்னுணர்வு பெற்று எழ இரண்டாம் முறையாக இயேசு தரையில் விழுகிறார்.

**விவிலியத்தில்:**

நற்செய்தியில் தற்புகழ்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு பரிசேயர், வரிதண்டுபவர் பற்றிய உவமை . ' கடவுளே, நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபசாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ இந்த வரிதண்டுபவரை போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன்;வாரத்தில் இரு முறை நோன்பிருக்கிறேன்; என்வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன். ' என்று பரிசேயர் இறைவனிடம் வேண்டினார்: ஆனால் வரிதண்டுபவர் தொலையில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக்கொண்டு, **' கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும் '** என்று இறைவனிடம் வேண்டினார்: பரிசேயர் தன்னை உயர்த்தி, அடுத்தவரை தாழ்த்திப் பார்க்கிறார். வரிதண்டுபவர் தன் தாழ்நிலையை நினைத்து வருந்துகிறார். தன்னையே தாழ்த்திக் கொண்ட வரிதண்டுபவர் தான், இறைவனுக்கு ஏற்புடையவராக வீடு திரும்பினார் என்று இயேசு தீர்ப்புக் கூறகிறார். 'தங்களை தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவிச் செல்லும்' என்று சீராக்கின் ஞானம் எடுத்துக் கூறுகிறது.

**நம் வாழ்வில்:**

தற்புகழ்ச்சி ஒரு வகை நோயாகும்; நம்மில் பெரும்பாலோர்க்கு இந்த நோய் உண்டு; பெருமையை எல்லா மனிதரும் தேடுகின்றனர். மற்றவர்கள் தங்களைப் பற்றி பெருமையாகக் கூறும்போது மனதில் ஒரு திருப்தி உண்டாகிறது. நாம் பெற்றிருக்கின்ற வெற்றிக்காக மகிழ்ச்சியடைவது நல்லதுதான். ஆனால் நம்மிடம் இல்லாத நன்மைகளை நம்மிடம் இருப்பதாக பெருமையடித்துக் கொள்வதுதான் தங்களையே ஏமாற்றிக் கொள்ளும் செயல். அதிலும், மற்றவர்களைக் குறைத்து நம்மை உயர்த்தி பேசுவது காற்றால் நிரப்பப்பட்ட பலுனை போன்றதாகும். தன்னால் ஆனது, என்னால் மட்டும் ஆனது, எனவே நான் மற்றவரைவிட சிறப்புக்குரியவர் என்றும், மற்றவரை மட்டம் தட்டியும் பார்க்கும் எண்ணம், நம்மில் ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு வகையில் புதைந்திருக்கிறது. இதனை மாற்றி, என் வாழ்வு ஆண்டவர் தந்த பரிசு, என் திறமைகள் ஆண்டவர் தந்த செல்வம், இறைதுணையால் தான் எதனையும் சாதிக்க முடிகிறது -என்ற தெய்வீகப்பண்பில் வாழ முயற்சிப்போம்.தற்பெருமையில் வாழ்ந்த நம் பரிசேய நிலையை நினைத்து மனம் வருந்துவோம், மனம் மாறுவோம்.

**ஜெபம்:**

தாழ்ச்சிக்கு இலக்கணமே எம் இயேசுவே ! தற்புகழ்ச்சி என்னில் மேலோங்கும் போதெல்லாம், எல்லாம் நீ தந்தது என்ற மனப்பாங்கில் **எல்லாம் உம் மகிமைக்கே** என்று கூறும் வரம் தாரும்.ஆமென்

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும் மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 8ஆம் நிலை : இயேசு எருசலேம் பெண்களை சந்திக்கின்றார்.

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

**அன்பு எரிச்சலுக்கு இடம் கொடாது**

பரிசேயர் வீட்டில் பாவியான பெண் ஒருவர் இயேசுவின் காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து, தம் கூந்தலால் துடைத்து, தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார்.பரிசேயர் இதைக் கண்டு, ' இவர் ஓர் இறைவாக்கினர் என்றால், தம்மைத் தொடுகிற இவள் யார், எத்தகையவள் என்று அறிந்திருப்பார்; இவள் பாவியாயிற்றே என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டதை இயேசு அறிந்தும் எந்த ஒரு கோபத்திற்கும் எரிச்சலுக்கும் இடம் கொடாமல், அப்பெண்ணின் அன்பை பற்றி பெருமையாக பேசி அவள் பாவத்தை மன்னித்து **அமைதியுடன் செல்க** என்ற இயேசு , இப்போது தன் பாடுகளின் பயணத்தில் கண்ணீருடன் தன்னை சந்திக்க வந்துள்ள எருசலேம் மகளிருக்கும் அழாதீர்! ‘என் பயணம் அன்பின் பயணம்’ என்கிறார்.

**விவிலியத்தில்**:

எரிச்சல் கோபத்தின் மறுரூபம், எரிச்சல் மனிதனை விரக்தியின் விளிம்புக்கும் சாவுக்கும் தள்ளிவிடுகிறது. இத்தகைய எரிச்சலை கண்ணீராக மாற்றி கடவுள் முன் ஜெபமாக எடுத்துச் சென்ற எல்லா பெண்களின் வேண்டுதலுக்கும் கடவுள் பதிலளித்தார் என்பதற்கு சில சான்றுகள்

தன் இனத்தை விட்டு விட்டு நகோமிக்கு ஒரு நல்ல மருமகளாக கடவுளையே தன் தெய்வமாக ஏற்றுக்கொண்ட கைம்பெண் ரூத்துவுக்கு புதியதொரு வாழ்வை ஆண்டவர் அளித்தார்.

குழந்தை பேற்றிற்காக அழுது ஜெபித்த அன்னாவுக்கு சாமுவேலை கடவுள் பரிசாக அளித்தார்.

பொய் சாட்சிகளால் சாவுக்கு தீர்ப்பளிக்கப்பட்ட சூசன்னா என்ற பெண்ணின் கதறல் நிறைந்த ஜெபத்திற்கு கடவுள் தானியேலை அனுப்பி அப்பெண்ணை சாவினின்று விடுவித்தார்.

'கைம்பெண்ணாகிய எனக்கு செவிசாயும்' என்று குப்புற விழுந்து இஸ்ராயேல் மக்களுக்காக ஜெபித்த யூதித்து என்ற வீரப்பெண்ணுக்கு **கடவுள்** வெற்றி தந்தார். பெண்களின் கண்ணீர் விலையுயர்ந்தது, அக்கண்ணீர் கடவுளின் இதயத்தையும் கரைக்கும் தன்மை கொண்டது, என்பதற்கு இப்பெண்களின் கண்ணீர் நிறைந்த ஜெபங்களே சாட்சி.

**நம் வாழ்வில்:**

பெண்களின் வாழ்வும், பாதுகாப்பும் மிகவும் கேள்விக்குறியாக மாறிவிட்ட இக்காலத்தில், துன்பங்களை சந்திக்காத பெண்களே இல்லை எனலாம். தாய் என்ற நிலையிலும், மகள் என்ற நிலையிலும் , மனைவி என்ற நிலையிலும், மருமகள் என்ற நிலையிலும் ஒரு பெண்ணிற்கு வருகின்ற இடர்கள் ஏராளம். பெண்ணை எரிச்சலுக்கு உட்படுத்தி, அவள் அன்பை காயப்படுத்தும் நிகழ்வுகள் எழுவதை தவிர்க்க முடியாது. இப்படிப்பட்ட எரிச்சல் மிகு காயங்களை ஒரு பெண்ணாக எப்படி கையாளுகின்றோம். சிந்திப்போம். இதோ! விவிலியம் நமக்கு முன் மாதிரியாக விட்டு சென்ற பெண்களைப் போன்று நாம் சந்திக்கும் எரிச்சல்களை கண்ணீராக கடவுள் முன் அன்றாடம் கொண்டு வருவோம், கண்ணீரை காண்கின்ற கடவுள் நம் கடவுள். **நான் உனக்கு நலம் அளிப்பேன், உன் காயங்களை ஆற்றுவேன்** என்கிறார் ஆண்டவர், இதோ கண்ணீரோடு சிலுவைப் பயணத்தில் இயேசுவை சந்தித்த எருசலேம் மகளிருடன் இணைந்து, ஆண்டவரை நாமும் சந்திப்போம், **உன் கண்ணீரின் நாட்கள் ஒழிந்து போகும்** என்கிற இயேசுவின் குரலைக் கேட்போம்.

**ஜெபம்**:

கண்ணீரை காண்கின்ற எம் இயேசுவே! துன்பத்தில் எரிச்சலுக்கு இடம் கொடாமல், அன்றாடம் நாங்கள் சந்திக்கும் எரிச்சல்களை ஜெபமாக மாற்றி ஜெயமாக பெற்றுக்கொள்ள வரம் தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 9- ஆம் நிலை : இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

**அன்பு இறுமாப்பு கொள்ளாது**

நீர் இறைமகன் என்றால் கீழே குதியும்-என்ற அலகையின் சோதனையில் இறைமகனுக்குரிய அதிகாரத்தை இயேசு நிரூபிக்க விரும்பவில்லை. நீர் கடவுளின் மெசியா என அறிக்கையிட்ட பேதுருவையும் தன்னைப்பற்றி யாரிடமும் சொல்லவேண்டாம் என்று கூறி தன் பெயரை பிரபலபடுத்த விரும்பவில்லை. ஒவ்வொரு வல்ல செயல்களிலும் தந்தையை மாட்சிப்படுத்தினார். அவர் பேச்சில் இறுமாப்பு இல்லை, பணிவு இருந்தது. பார்வையில் இறுமாப்பு இல்லை பரிவு இருந்தது. செயலில் செருக்கு இல்லை, அன்பு இருந்தது. அதிகாரத்தில் ஆணவம் இல்லை, அடக்கம் இருந்தது. ஆனால் மாந்தரின் இறுகிப்போன இறுமாப்பினால் ஏற்பட்ட பழுவினைத் தாங்க இயலாமல் சிலுவையுடன் மூன்றாம் முறையாக தரையில் விழுகிறார் இயேசு.

**விவிலியத்தில்:** யூதித்து புத்தகத்தில் இறுமாப்பினால் வந்த அழிவைக் குறித்த ஒரு நிகழ்வு: இறுமாப்பை வெறுக்கும் கடவுள் இஸ்ராயேல் மக்கள் நடுவே இருக்கிறார். அவர்கள் சார்பாக இருந்து அவர்களை பாதுகாக்கிறார். எனவே அவர்களை எதிர்த்து போரிட வேண்டாம் என்று சொல்லியும் இஸ்ரேயலின் கடவுளை துச்சமாக நினைத்து, இஸ்ராயேலை வலிமை குறைந்தவராக எடை போட்டு இறுமாப்புடன் பேசி, இஸ்ராயேலை எதிர்த்து நின்ற அசீரிய மன்னன் நெபுகத்னேசரின் படைத்தலைவன் ஒலோபெரின்க்கு பயந்து **ஆண்டவரே எங்கள் பகைவர்களின் இறுமாப்பை பாரும் எங்கள் தாழ் நிலையைக்கண்டு மனமிரங்கும், உமக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட எங்களை கண்ணோக்கும்** என்ற மன்றாட்டை எழுப்பிய யூதித்து வழியாக , கடவுளை இறுமாப்புடன் பேசிய ஒலோபெரின் தலையை வெட்டி யூத குலத்தை அழிவிலிருந்து காத்தார். இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்ட இருவருள், நீர் 'மெசியா தானே' உன்னையும் எங்களையும் காப்பாற்று என்று இறுமாப்புடன் இயேசுவை பழித்துரைத்த கெட்ட கள்வனின் கண்கள் பறிக்கப்பட்டது.

**நம் வாழ்வில்** : இக்கனியை உண்டால் நீங்கள் கடவுளைவிட பெரியவராக அல்லது கடவுளைப் போல ஆவீர்கள்' என்பதுதான் மனுக்குலம் சந்தித்த முதல் சோதனை.ஆணவமும் இறுமாப்பும் இயற்கையாக நம் வாழ்வில் அவ்வப்போது விளையாடி நம் குடும்ப அமைதியை கெடுத்துவிடுகிறது.சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவரும் அவரவர் இடத்தில் I am somebody great என்று நிரூபிக்கவும், மனிதர்களிடமிருந்து நற் பெயர் பெறவும் போட்டி மனப்பான்மையோடு செயல்படுகிறோம். **மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு வேலை செய்வதாகக் காட்டிக்கொள்ளாமல்,ஆண்டவருக்காகவே செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள். அதற்குக் கைம்மாறாக ஆண்டவர் உங்களுக்கு உரிமைப்பேறு அருளுவார்** - என்று பவுல் கூறுகிறார்.இறைவன் ஒருவரே எல்லா அதிகாரத்தின் ஊற்று என எண்ண வேண்டும். வாழ்வின் வளமையும், நிறைவும் அறிவியலினால், மனித அறிவினால் வருவதல்ல, மாறாக கடவுளிடமிருந்து வருவது. இந்த ஆசீர்வாதத்தைக் கண்டடைய ஒரேவழி கடவுள் முன்பாக அனைத்தையும் பணிவோடு செய்வது. **இறுமாப்புள்ளவர் வீட்டை ஆண்டவர் இடித்துத் தள்ளுவார்;** என்கிறது நீதிமொழிகள். நம் உரையாடலில் மரியாதையை , செயலில் பணிவை கண்ணில் பரிவை, கொஞ்சம் கொஞ்சமாக நம் வீடுகளில் தவழவிட்டு, இறுமாப்பினால் நம் மன வீடு இடிந்து போகாமல் பார்த்துக் கொள்வோம் சிந்திப்போம், செயல்படுத்துவோம்.

ஜெபம்: இயேசுவே! என் வாழ்வின் கடவுளே, இறுமாப்புள்ள பார்வைக்கும் பேச்சுக்கும், நடத்தைக்கும் நான் இடம் கொடாதிருக்கச் செய்யும். ஆமென்

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 10 ஆம் நிலை : இயேசு ஆடை அவிழ்க்கப்படுகிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

### அன்பு இழிவானதை செய்யாது

**உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்** என்று ஞானத்துடன், நியாயத்துடன் பேசி கயவர்களின் கையினின்று விபச்சாரப் பெண்ணை காப்பாற்றி "என் அன்பு இழிவானதை செய்யாது" என்ற மௌன மொழி கூறிய இயேசு, தன் ஆடையிழந்து இழி நிலைக்கு தள்ளப்பட்டு தன்மானம் இழந்து தவிக்கிறார்.

**விவிலியத்தில்:**

திருக்குடும்பத்தின் பாதுகாவலரும், அனைத்து குடும்பங்களுக்கும் எடுத்துக்காட்டான தலைவருமான யோசேப்பு தான் **"அன்பு இழிவானதை செய்யாது** என்ற அன்பின் இலக்கணத்தின் முன்மாதிரி. யோசேப்பு ஒரு நேர்மையாளர் என நற்செய்தி நூல் சான்று பகர்கின்றது. திருமணத்திற்கு முன் மரியா கருவுற்றிருப்பது தெரியவந்தும், மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார் என்பது யோசேப்பின் நேர்மைத்தன்மையின் ஓர் அடையாளம். ஒருவர் நேர்மையாளர் என்று சொல்வதற்கான அடையாளங்களுள் ஒன்று பிறரைப்பற்றி அவர் கொண்டுள்ள நல்லெண்ணம். பிறருக்கு இழிவானதை செய்யாமல், நற்பெயரை கெடுக்காமல், அன்புடன், கன்னியத்துடன் நடந்து கொண்ட இயேசுவும், சூசையும் அன்று இருந்ததால் தான், விபச்சாரப் பெண்ணும், மரியாவும் கல்லடியிலிருந்து காப்பற்றப்பட்டனர்.

**நம் வாழ்வில்:**

இன்று நம் அன்பு எப்படிப்பட்டது என்று சிந்திப்போம். நாம் வாழும் குடும்பத்தில், சமுதாயத்தில், நம்மில் எத்தனை பேர், பிறரது நற்பெயரை கெடுத்து, அவர்களின் மானம், மரியாதைக்கு களங்கம் விளைவித்து இருக்கிறோம்? **அன்பு இழிவானதை செய்யாது** என்று சிந்திக்கும் நாம், யோசேப்பை போன்று நேர்மையாளராக இல்லாவிட்டாலும் பிறரை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல், அவரது நற்பெயரை கெடுக்காமல் பிறர்மேல் நல்லெண்ணம் கொண்டு வாழ முன்வருவோம்.

**ஜெபம்:**

அன்பே உருவான இயேசுவே! எமக்காக உம் ஆடையை இழந்து அவமானப்படுத்தப்பட்ட உம்மை போற்றுகின்றோம். எம் சொல்லாலும், செயலாலும் அயலாருக்கு இழிவானதை செய்யாமல், எப்பொழுதும் நல்லெண்ணம் கொண்டவராய் பரிவுடன் வாழும் வரம் தாரும் ! ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 11- ஆம் நிலை : இயேசுவை ஆணியால் சிலுவையுடன் அறைகிறார்கள்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

### அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்

காட்டி கொடுத்தவனையும் பொறுத்துக்கொண்டு கட்டி தழுவினார் இயேசு. மறுத்தலித்தவரையும் மனதார மன்னித்து தலைவராக்கினார் இயேசு. அழிக்கத் துடித்தவனையும் பொறுத்துக்கொண்டு பெயர் சொல்லி அழைத்தார் இயேசு. இப்படி பல வழியாய் வந்த வலிகளை பொறுத்துக்கொண்ட இயேசு, தன் கரங்களையும்,கால்களையும் சிலுவையில் அறைய விரித்துக்கொடுக்கிறார். **என் அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்** எனற மெளன மொழிகளால் ஆணிகள் தரும் வலிகளை ஏற்றுக்கொள்கிறார்.

### விவிலியத்தில்:

கடவுளுக்கு ஏற்ற நீதிமானாக வாழ்ந்த யோபு, கடவுளின் அனுமதியுடன் சாத்தானால் சோதிக்கப்பட்டவர். இதனால் தன் மக்களை இழந்தார். சொத்து சுகத்தை இழந்தார்.உடல் நலத்தை இழந்தார். இருப்பினும் அனைத்தையும் இறை நம்பிக்கையினால் பொறுத்துக்கொண்டார். கடவுளைத் தூற்றினாரில்லை. அவர் மனைவியும், நண்பர்களும் அவருடன் வாக்குவாதம் செய்து கடவுளைப் பழித்துரைக்க தூண்டிவிட்ட போதிலும், கடவுளைப் பழித்துரைக்கவில்லை. துன்ப வேளையில் அரவணைக்க வேண்டிய நண்பர்கள் தன்னை அவமானப்படுத்தி இழிவுப்படுத்தி குற்றம் சாட்டிய போதும் அவர்கள் மேல் கோபம் கொள்ளாமல் பெருந்தன்மையோடு மன்னித்தார். ஏற்றுக்கொண்டார். அவர்களுக்காக இறைவனிடம் வேண்டினார். மனிதர் என்ற முறையில் தன் இயலாமையை தெரிவித்தாலும், தம் துன்பங்களை இறை நம்பிக்கையோடும், பொறுமையோடும், பெருந்தன்மையோடும் ஏற்றுக்கொண்டதற்கு கைமாறாக இழந்து போன அனைத்தையும் பன்மடங்காக இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

### நம் வாழ்வில் :

ஒவ்வொருவரின் வாழ்விலும் துன்பங்கள் வருவது சகஜம். ஆனால் அவற்றை நாம் எப்படி மேற்கொள்கிறோம் என்பதில் தான் நம் வெற்றியும், தோல்வியும் அடங்கியுள்ளது . கடவுளை பழிக்கிறோமா? அல்லது பிறரை காரணம் காட்டுகிறோமா? (அ) துன்பத்தை ஏற்றுக்கொள்கிறோமா? யோபுவை போல நம் துன்பங்களை பெருந்தன்மையோடும், இறைநம்பிக்கையோடும் பொறுத்துக்கொள்ளும் போது, எந்தச் சூழ்நிலையையும் நமக்கு சாதகமாக மாற்ற இறைவன் வல்லவர். அன்பால் ஒருவர் மற்றவரை பொறுத்துக்கொள்ளும் போது கடவுள் எதிரிகளையும் நம் நண்பர்களாக மாற்றுவார்.

### ஜெபம்:

ஆணிகளின் வலியையும், மனிதர்களின் பழிபாவத்தையும் எமக்காக பொறுத்துக்கொண்ட இயேசுவே! எம் துன்பங்களையும் சகமனிதர்களின் விருப்பு வெறுப்பையும் உமக்காக பொறுத்துக்கொள்ளும் வரம் தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 12-ஆம் நிலை : இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

### அன்பு உண்மையில் மகிழும்

இலாசரின் இறப்பை, கடவுளின் மாட்சி வெளிப்படும் நிகழ்வாக கண்ட இயேசு, இலாசரின் இறப்பிற்காக அழுத மார்த்தாவுக்கு உன் சகோதரன் உயிர்த்தெழுவான் என்ற நம்பிக்கையை கொடுத்த இயேசு, 12 வயது சிறுமியை உயிர்பெறச்செய்த போது, சுற்றத்தாரிடம் **சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்** என்று இறப்பை உறங்கி விழிக்கும் அன்றாட நிகழ்வாக கூறிய இயேசு தன் இறப்பை நண்பனுக்காக உயிர் கொடுக்கும் உண்மை அன்பாக வெளிப்படுத்துகிறார்.

**விவிலியத்தில்:**

உண்மை அன்பு, உயிர் கொடுக்கவும் தயங்காது, உண்மை அன்பு உண்மையை மறைக்கவும், மறுக்கவும் நினைக்காது, உண்மையில் உளம் மகிழும் என்பதற்கு
எடுத்துக்காட்டு - இறைவாக்கினர் தானியேல். தானியேலும் அவருடைய தோழர்களும் கடவுள் மீதுள்ள இறைப்பற்றுறுதியை விட்டுக் கொடுக்காமல், கடுமையான சூழலிலும் கட்டளைகளை கடைப்பிடித்து ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். நெபுகத்னேசர் நிறுவிய பொற்சிலையை வணங்க மறுத்ததால் தீச்சூளையில் எறியப்பட்டபோது நெருப்பு அவர்களை தீண்டவேயில்லை. மூவரும் ஒரே குரலில் தீச்சூளையில் கடவுளைப் போற்றி புகழ்ந்து மாட்சிபடுத்தினர். அரக்கப்பாம்பு , உண்மை கடவுள் இல்லை என்று மன்னருக்கு நிரூபித்து காட்டிய தானியேலை பாபிலோனியர்கள் ஏழு சிங்கங்கள் வாழும் குகையில் தூக்கி எரிந்த போது சிங்கங்கள் எத்தீங்கும் தானியேலுக்கு இழைக்கவில்லை. உண்மை கடவுளுக்காக தன் உயிரையும் கொடுக்க முன்வந்தார் தானியேல். உண்மைக்கு இறப்பில்லை என்பது இவரில் உண்மையாயிற்று.

**நம் வாழ்வில்**:

நம் வாழ்வு தினமும் கடவுளின் கிருபையில் நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நம்புகிறோமா? சின்னஞ் சிறிய செயல்களிலும் கடவுளின் அன்புக் கரம் நம்மை தாங்குவதை உணர்கிறோமா? பெற்றுக் கொண்ட அற்புதங்களை அடுத்தவரிடம் சொல்லி கிறிஸ்துவுக்கு சான்று பகர்கிறோமா? இதோ இன்று இச்சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு நம்மைப் பார்த்து, என் இறப்பில் தான் உன் மீட்பு உள்ளது , என் சிலுவை சாவுக்கு சாட்சியாக நீ நிற்பாயா? என்று கேட்கிறார். உண்மை கடவுளுக்கு எப்படி, எப்போது நாம் சான்று பகரப் போகிறோம்.இறைவார்த்தை என்னும் உண்மையில் நம்மையும் நம் குடும்பத்தையும் எப்போது கட்டியெழுப்பப் போகின்றோம்.சிங்கங்களின் நடுவிலும்,தீச்சூளையின் நடுவிலும் கடவுளை போற்றி துதித்த தானியேலைப் போன்று நம் துன்பத்தின் மத்தியில் கடவுளை போற்றி துதிக்க துணிவு நம்மிடம் உள்ளதா? சிந்திப்போம் ! செயல்படுவோம்.

**ஜெபம்:**

தன்னுயிரை சிலுவையில் பலியாக்கி உண்மை அன்பை வெளிக்காட்டிய இயேசுவே! உண்மை கடவுளாகிய உம்மை நாங்கள் வாழும் இடத்தில் வெட்கப்படாமல் அறிவிக்கும் இறையன்பைத் தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 13- ஆம் நிலை இயேசுவின் உயிரற்ற உடலை மடி சுமந்த அன்னை

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

### அன்பு அனைத்தையும் நம்பும்

கபிரியேல் தூதரின் வாழ்த்துரையை கேட்ட நாள் முதல், ஆண்டவர் தமக்கு கூறிய அனைத்தும் நிறைவேறும் என நம்பி இயேசுவை தன் கருவறையில் சுமக்க துணிந்த அன்னை, இப்போது இயேசுவின் உயிரற்ற உடலை மடி சுமந்து, மனம் நொந்து இனி நடக்க என்ன இருக்கின்றது என்று நிலைகுலைந்து போகாமல் இறைத்திட்டத்தை மனதிலும் இறைமகனை மடியிலும் வீரத்தோடு சுமந்து 'என் அன்பு அனைத்தையும் நம்பும் என்ற மௌன மொழியை நம் ஒவ்வொருவரையும் பார்த்து கூறுகின்றார் .

**விவிலியத்தில்:**

நம்பிக்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆபிரகாம். ஆண்டவரின் அழைப்புக்கு ஆம் சொல்லி, அவர் தந்த வாக்குறுதியை நம்பி, வேற்று நாட்டிற்கு புறப்பட்டு சென்ற ஆபிரகாம், ‘**உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை சிறப்புறச் செய்வேன்**’ என்ற கடவுளின் வாக்குறுதி நிறைவேறும் என்ற அறிகுறியே இல்லாமல் இருந்தாலும் ஆண்டவரின் நேரம் வரும் வரை காத்திருந்தார். தன் நம்பிக்கையால் ஆண்டவர் வாக்களித்ததை பெற்றுக் கொண்டார். நூறு வயதில் தனக்கு பிறந்த ஒரே மகனை பலியாக கேட்ட ஆண்டவருக்கு கீழ்படிய சிறிதும் தயங்கவில்லை. நம்பிக்கையால் ஆண்டவரின் சோதனையை வென்று அவர் இதயத்தையும் வென்றுவிட்டார்.

**நம் வாழ்வில்**:

நாம் வாழும் உலகம் விழுந்து கிடக்கும் உலகமாக மாறிவிட்டது. தன்னம்பிக்கையில்லை, இறை நம்பிக்கை இல்லை, பிறர் மீது நம்பிக்கையும் இல்லை, பெரும்பாலான கணவன்-மனைவியரிடம் நம்பிக்கையின்மை தலைவிரித்தாடுகிறது இதனால் உறவுகள் பிரிக்கப்படுகிறது, உயிர்கள் பலியாகிறது, சக மனிதர்களின் பொய் புரட்டுகளை நம்பி நிம்மதி இழந்து வாழ்வை தொலைத்து விடுகிறோம். ஆபிரகாம், அன்னை மரியாள் போன்ற நம்பிக்கை நட்சத்திரங்களை முன் மாதிரியாக கொண்டு தன்னம்பிக்கையிலும், இறைநம்பிக்கையிலும் நம் வாழ்வை தொடருவோம். அன்பு அனைத்தையும் நம்பும் என்ற அன்பின் இலக்கணத்தை நம் குடும்பங்களில் தொடங்குவோம் .ஆபிரகாமை போன்று நம் சந்ததிக்கே ஆசிராய் வாழ்வோம்.

**ஜெபம்**:

நம்பிக்கையின் நாயகியே எம் வியாகுல மரியே! எமக்கென்று வைக்கப்பட்டுள்ள இறைத்திட்டம் நிறைவேற நம்பிக்கையினாலும், அன்பினாலும் எங்கள் குடும்பத்தை கட்டியெழுப்ப வரம் தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**

## 14 ஆம் நிலை: இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

**அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம் . ஏனென்றால் உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டருளினீர்**

### அன்பு அனைத்தையும் எதிர்நோக்கும்

இயேசுவை சிலுவையில் அறைந்த போது இருந்த திரளான கூட்டம், இயேசு இறந்த பின் கலைந்துப் போனது. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, நிக்கோதேமு, மகதல மரியா, இயேசுவின் தாய் மரியாள் போன்ற உண்மையான அன்புடையவர்கள் மட்டுமே உடனிருந்தார்கள். இவர்கள் இயேசுவையே தங்களது எதிர் காலத்தின் ஒரே நம்பிக்கை என்று எதிர் நோக்கி, இயேசுவின் கல்லறை வரை செல்கின்றார்கள். **அன்பு அனைத்தையும் எதிர் நோக்கும், அந்த எதிர் நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது** என்ற மௌன மொழிபேசி இயேசு கல்லறையில் அடக்கம் செய்ய தன்னை கையளிக்கிறார்.

**விவிலியத்தில்:**

அன்பு அனைத்தையும் எதிர் நோக்கும் என்பதற்கு விவிலியத்தில் சிறந்த எடுத்துக்காட்டு நோவா. நல்லவர்களின் வாழ்வு கல்லறைகளில் முடங்கி விடாது, கடவுளோடு நடக்கும் நல்லவர்களுக்கு அழிவில்லை என்பதையே வெள்ளப்பெருக்கில் இருந்து காப்பாற்றப்பட்ட நோவாவின் வாழ்வு நமக்கு உணர்த்துகிறது. பாவத்தால் சீர்கெட்டு போயிருந்த மண்ணுலகை அழித்து நேர்மையாளரான நோவாவும் மற்றும் அவர் குடும்பமும் பேழையில் பாதுகாக்கப்படும் - என்று கடவுள் தன்னிடம் செய்த உடன்படிக்கை நிறைவேறும் என நோவா **ஒன்பது வருடங்கள் மன உறுதியுடன்** எதிர்நோக்கினார். நோவாவின் எதிர்நோக்கையும், தன் வாக்குறுதியையும் ஆண்டவர் நிறைவேற்றினார். வெள்ளப்பெருக்கிற்கு பின், பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்று நோவாவிற்கும் அவர் புதல்வருக்கும் ஆசி வழங்கினார்.

**நம் வாழ்வில்:**

**அன்பு அனைத்தையும் எதிர்நோக்கும்** என்ற சிந்தனை, இயேசுவின் அடக்கத்தில் தான் கிறிஸ்தவத்தின் தொடக்கம் உள்ளது என்ற எதிர்நோக்கோடு வாழ அழைக்கின்றது. நாற்பது நாள் ஜெபம், தவம் என்று ஒறுத்தலில் ஆர்வத்தோடு ஈடுபட்டு உடை அளவில், உணவு அளவிலும் தவக்கால கிறிஸ்தவர்களாக மாற பழகி விட்ட நாம்,நம் குடும்ப வாழ்விலும், கிறிஸ்தவ நெறிமுறையிலும் நோவாவின் குடும்பத்தை போன்று கடவுளுக்கு பிடித்த, கடவுளுக்கு நெருக்கமான குடும்பமாக வாழப்போவது எப்போது? வெள்ளப்பெருக்கிலும் எதிர்நோக்கோடு வாழ்ந்து தன் குடும்பத்தை அழிவினின்று பாதுகாத்த நோவாவைப் போன்று நம்மையும் நம் குடும்பத்தையும் பிள்ளைகளையும் உலகின் போக்கினின்று கிறிஸ்துவின் வழிக்கு கொண்டுவர எத்தகைய பாதையை தேர்ந்தெடுக்கப் போகிறோம்? நம் சந்ததிக்கு விண்ணகத்தைப் பற்றிய எதிர்நோக்கை எப்படி விட்டுச்செல்லப்போகிறோம்? சிந்திப்போம்! செயல்படுவோம்.

**ஜெபம்:** எமக்காக கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசுவே ! உம் மீது கொண்ட அன்பினால் விண்ணகத்தையும் விண்ணகம் சார்ந்த செல்வங்களையும் நாடவும், அதை அடைவதையே எதிர்நோக்காக கொண்டு வாழ**வும்** உம் கிருபை தாரும். ஆமென்.

**எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா! எங்கள் மீது இரக்கமாயிரும்**
**மரித்த இறைமக்களின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுதல் அடைவதாக. ஆமென்**